# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | மாசி - 24 | 08 - 03 - 2003 | சனிக்கிழமை | ஓசை 18



மண விழாக்களை மகிழ்வுடன் கொண்டாட மனதிற்கினிய ஆடைத்தெரிவுக்கு

சாந்தா ரெக்ஸ்

பஜார் வீதி, வவுனியா

T.P:24-22879

(சி 7650)


### தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க

# விடுதலைப் புலிகளும் - தமிழ்க் கூட்டமைப்பினரும்

# ஒற்றுமையாகப் பாடுபட உறுதி பூண்டுள்ளோம்

## அரசியல் ஆலோசகர் பாலசிங்கத்துடனான சந்திப்பின் பின் தமிழ்க் கூட்டமைப்பினர்

**தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க விடுதலைப் புலிகளும், தமிழ்க் கூட்டமைப்பினரும் ஒற்றுமையாகப் பாடுபட உறுதி கொண்டுள்ளோம் என நேற்று கிளிநொச்சியில் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழர் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்:**

இச்சந்திப்புப் பற்றி கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவிக்கையில்,

நடைபெற்ற இரண்டரை மணிநேர சந்திப்பின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களும், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும் கடந்த ஐந்து சுற்றுப் பேச்சுவார்த்தைக

(08 ஆம் பக்கம் பார்க்க)





அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள், தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பினரை வரவேற்பதையும், அவர்களுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் தமிழ்ச்செல்வன் கிளி.யில் சந்திப்பு!

### அபிவிருத்திப் பணிகள் பற்றிப் பேச்சு

(அலுவலக செய்தியாளர்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் தலைமையிலான உயரதிகாரிகள் குழுவொன்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை நேற்றுச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளது. இப்பேச்சுக்களில் வடக்கு - கிழக்கு அபிவிருத்திப் பணிகள் பற்றிப் பேசப்பட்டது.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியினை இக்குழு வந்தடைந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் ரடோ ஓசினோ, தெற்காசிய பிராந்தியத்துக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் நாயகம் ஜோசி ஹைரோ இவாஷாகி, தெற்காசிய திட்ட ஒருங்கிணைப்பு பிரிவுப் பணிப்பாளர் ஹைபில் ரொகுமன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிறிலங்காவுக்கான பணிப்பாளர் ஜோன் ஆர்சுனி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிரேஷ்ட ஆலோசகர் யகூகி கென்சாகி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் வெளியுறவு பணியக பிரதிப் பணிப்பாளர் ஆன்கோன் ஆகியோரே வன்னி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மருத்துவமனைக்கான அடிக்கல்லை ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் நாட்டினார்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ள புதிய வைத்தியசாலைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுச் சிறப்புற இடம்பெற்றது. இதில் ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

இராணுவ நடவடிக்கை மூலம் முற்றாகச் சேதமாக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையினை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் புதிய இடத்தில் நிர்மாணிப்பதற்கான முதற்கட்ட வேலையாக நேற்றுப் பகல் 11 மணியளவில் ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் ரடா ஓசீனோ அவர்களால் அடிக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின்

# மாநாட்டிற்கான முன்னோடிக் கூட்டத்தில் அமெ. இராஜாங்க அமைச்சர் கொலின் பவல்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கான முன்னேற்பாட்டுக் கூட்டத்தில் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகவலை பதவிக் காலம் முடிந்து செல்கின்ற சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த முன்னேற்பாட்டுக் கூட்டம் வாஷிங்டனில் அடுத்த மாதம் இடம் பெறவுள்ளது. தற்போது இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா பூரண ஆதரவு வழங்குகின்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் தொடர்கிறது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கமும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர் ஒன்றியமும் இணைந்து நேற்று நான்காவது நாளாகவும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி கடந்த 04 ஆம் திகதி முதல் கிளிநொச்சி அரச அதிபர் செயலகம், கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களம் முன்பாக மறியல் போராட்டத்தை ஆரம்பித்த தொண்டர் ஆசிரியர்களும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தினை தொடர்ந்தும் நடத்தி

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பதவியேற்பு

(கொழும்பு)

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெக்கி ரெலவ்சன் தனது பதவியினை நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் இலங்கை வந்த இவர் தமிழீழத் தேசியத்தலைவர்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணிலுடன் சந்திப்பு

(கொழும்பு)

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அலரிமாளிகையில் பகல் 11.30 மணி தொடக்கம் 1.00 மணி வரை இப்பேச்சுக்கள் இடம்பெற்றன.

அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் பிரதமரைச் சந்தித்த இக்குழுவில் தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி பேரியல் அஷ்ரப், அதன் உபதலைவர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, அமைச்சர் நூர்தீன் மசூர் உட்படப் பலர்

(08 ஆம் பக்கம் பார்க்க)


# ஆசிய அபிவிருத்தி வங்கிக்குழுவின் கிளிநொச்சி விஜயம்






கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்படவுள்ள மருத்துவமனைக்கான அடிக்கல்நாட்டு விழாவில் கலந்து கொண்ட ஆசிய அபிவிருத்தி வங்கிக்குழுவினரையும், ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் மற்றும் பிரதிநிதிகள் அடிக்கல் நாட்டுவதையும் மேலுள்ள படங்களில் காணலாம்.





கிளிநொச்சி மருத்துவமனைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வின் ஞாபகார்த்தக் கல்லினை ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் திறந்து வைக்கிறார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு விஜயம் செய்த ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினர் வரவேற்கப்படுவதனையும், சேதமடைந்த பாடசாலையைக் குழுவினர் பார்வையிடுவதையும் மேலுள்ள படங்களில் காணலாம்.


வரிவிளம்பரம்

**தவறிவிட்டது**

எனது மோட்டார் சைக்கிளின் பின்பக்க (மஞ்சள் நிற) NPGG 9955 இலக்கத்தகடு A-9 வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கிளிநொச்சி மக்கள் வங்கி முகாமையாளரிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். மு.சிவநேசன், மக்கள் வங்கி, வவுனியா. (2999)


## சுற்றறிக்கை இரத்து

பாடசாலையில் ஆசிரியர் தேவையைக் கணிப்பதற்காக கல்வி மனிதவள கலாச்சார அமைச்சினால் வெளியிடப்பட்ட 2001/27ம் இலக்க சுற்றறிக்கையை பாடசாலை கல்வி அமைச்சு இரத்துச் செய்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இரத்துச் செய்துள்ள சுற்றறிக்கைக்குப் பதிலாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 97/04ம் இலக்க சுற்று நிருபமும் அது தொடர்பான திருத்தங்களுமே நடைமுறையில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நீதிமன்றால் ஒத்திவைப்பு

சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் வேலை நிறுத்தம் காரணமாக உடத்தலவின்ன படுகொலை வழக்கு தொடர்பான விசாரணைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தது. ஆனால் சாட்சிகள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை என்பதால் எதிர்வரும் திங்கட்கிழமை வரை வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


## உணவு உரிமத்திற்கு விண்ணப்பிக்குக

வன்னிப் பெருநிலப்பரப்பிற்குட்பட்ட உணவு உற்பத்திகள், விற்பனைகள், களஞ்சியங்கள், ப.நோ.கூ.சங்க நுகர்ச்சி விற்பனைகள், நடமாடும் உணவு விற்பனைகள்,பல்பொருள் வாணிபங்கள், பல்பொருள் பெட்டிக்கடைகள் உள்ளடங்கலான அனைத்து உணவு கையாளும் நிலையங்களும் தமிழீழ சுகாதார சேவைகளின் 2003 ம் ஆண்டு உணவு உரிமத்திற்கு 10.03.2003ல் இருந்து 10.04.2003 வரையான காலப்பகுதிக்குள் பிரதேச,மாவட்ட இணைப்பாளர்களிடம்/மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்டப் பணிமனைகளில் உணவு உரிமத்திற்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பணிப்பாளர்,
தமிழீழ சுகாதார சேவைகள்.

(8001)



## முக்கிய அறிவித்தல்

### (துணுக்காய் பிரதேச சபை)

எமது பிரதேச சபை எல்லைக்குள் மண், கிரவல் ஏற்றுவது தொடர்பாக 2003.03.07 ஆம் திகதி தொடக்கம் கீழ்க் காட்டியவாறு துணுக்காய் பிரதேச சபையின் அனுமதியைப் பெற்று செயற்படும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுவதுடன், தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

1. உள்ளூர் பயன்பாட்டுத் தேவைக்கு
   (1-லோட்) உழவு இயந்திரம் ரூபா - 40.00

2. வெளியிடங்களுக்கு ஏற்றிச் செல்லும்
   (1-லோட்) மணல் உழவு இயந்திரம்
   ரூபா - 100.00
   கன்ரர் ரூபா 200.00, லொறி ரூபா 300.00.

தகவல்:-
விக்ரர் ஜெயசிங்கம்,
விசேட ஆணையாளர்.
பிரதேச சபை,
துணுக்காய்.

(சீ-2915)



## இலக்கிய நூல்களுக்கான பரிசுத் திட்டம் 2002

**வடக்கு - கிழக்கு மகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள்.**
**விளையாட்டுத்துறை அமைச்சு.**
**திருகோணமலை.**

வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு உட்பட்ட 8 மாவட்டங்களையும் சேர்ந்த எழுத்தாளர்களிடமிருந்து இலக்கிய நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும்.

01) நாவல்
02) சிறுகதை
03) கவிதை
04) நாடகம்
05) சிறுவர் இலக்கியம்
06) இலக்கிய ஆய்வும் விமர்சனமும்
07) உயர் கல்விக்கான நூல்கள்

மேற்காட்டப்பட்ட துறைகளைச் சாராத நூல்களையும் போட்டிக்கு அனுப்பிவைக்கலாம்.

**போட்டி விதிகள்**

01) ஒரு எழுத்தாளர் எல்லாப் போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம்.
02) பங்குபற்றும் எழுத்தாளர் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 8 மாவட்டங்களில் ஒன்றைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
03) நூல்கள் 2002 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதிக்குள் அச்சில் வெளிவந்ததாக இருத்தல் வேண்டும்.
04) போட்டியாளர்கள் ஒவ்வொரு போட்டிக்கும் நூல்களை அனுப்பும்போது நான்கு பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.
05) போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும். நூல் பிரதிகளை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் மே 15 ஆம் திகதிக்கு முன்னர்,

உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு,
திருகோணமலை.

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**ஆர். தியாகலிங்கம்,**
செயலாளர்.

(சி-7805)

# ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலை எதிர் கொள்ளத் தயாராய் இருக்கிறோம்

## -சனாதிபதி சதாம் ஹூசைன் அறிவிப்பு

(பாக்தாத்)

**அமெரிக்கா நடத்தவுள்ள தாக்குதல் அறிவற்ற செயல் எனவும், அதனை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் ஈராக் சனாதிபதி சதாம் ஹூசைன் கூறியுள்ளார்.**

ஈராக் தலை நகர் பாக்தாத்தில் நடைபெற்ற அமைச்சர் கள் மற்றும் இராணுவ அதிகாரி களின் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய சதாம் அமெரிக்கா போர் தொடுத்தால் அது முற்றிலும் அறி வற்ற செயல் எனக்கூறியுள்ளார்.

முன்பு நடந்த போரின் போது அமெரிக்கப் படைகளை எதிர்த்துப் போரிட்டது போல இப்போதைய போரிலும் தைரியத்துடன்போரிடத் தயாராகவுள்ளதாகவும் தெரிவித் துள்ளார்.

இது இவ்வாறிருக்க அமெரிக்க நாடாளுமன்ற மேல் சபையில் பேசிய அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கொலின் பவல், சதாம் விரைவில் பதவி நீக்கம் செய்யப்பட்டு ஈராக் நாட்டில் விரைவில் புதிய அரசு உருவா கும் என தெரிவித்துள்ளார். இந்த இராணுவ நடவடிக்கையின் மூலம் அந் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ முடியும் என பவல் மேலும் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் நேற்று முன் தினம் அமெரிக்கப் போர் விமானங்கள் ஈராக் நாட்டின் தென் பகுதியில் நடத்திய தாக்குதலில் 03 பேர் உயிரிழந்துள்ளனர்.

## தலிபான், அல்கைதா அமைப்பினர் மீண்டும் அணிதிரள்வு

### -இந்திய, ஆப்கான் அரசுகள் கவலை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபானும், அல்கைதா அமைப்பினரும் மீண்டும் அணிதிரளத் தொடங்கி யுள்ளதாக செய்திகள் தெரிவிக் கின்றன.

இது குறித்து இந்தியாவும் ஆப்கானிஸ்தானும் தனது கவலைகளை நேற்று முன்தினம் பரிமாறிக் கொண்டுள்ளன.

பயங்கரவாதத்தை முற்றிலுமாக அழிக்க வேண்டியதன் அவசி யத்தை இரு நாடுகளும் வலியுறுத்தியுள்ளன. இந்தியா வந்துள்ள ஆப்கானி ஸ்தான் அதிபர் பிரதம மந்திரி வாஜ்பா யுடன் பேச்சுவார்த்தை நடத்தி யுள்ளார். இரு நாடுகளுக்கி டையே சலுகை வர்த்தக ஒப்பந்தம் ஒன்று இறுதியாகத் தயாரிக்கப் பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் மிகப் பெரிய சாலை ஒன்றை அமைக்க 07 கோடி டொலர் மானியத்தை வழங்க பிரதம மந்திரி ஒப்புக் கொண்டுள்ளார்.

## பலஸ்தீன அதிகார சபையின் பிரதமராக மகுமுத் அப்பாஸ்

(ஜெருசலேம்)

பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் சிரேஷ்ட அதிகாரி யான மகுமுத் அப்பாசை பலஸ்தீன அதிகாரசபையின் பிரதம மந்திரி பதவியை ஏற்கு மாறு கேட்டுள்ளார்.

இன்று நடைபெறவுள் பலஸ்தீன சட்டசபை நடவடிக்கை களின் போது அவரது நியமனம் அங்கீகரிக்கப்படவுள்ளதாகப் பலஸ்தீன அதிகார சபை செய்திகள் தெரிவிக்கின்றன.

## மனித உரிமை மீறல்களை ஆராய ஈராக்கில் கண்காணிப்பாளர் வேண்டும்

### - சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள்

(லண்டன்)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கண்காணிப்பாளர்கள் ஈராக்கில் நிலைநிறுத்தப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப் புச் சபை கேட்டுள்ளது.

தற்போது ஈராக்கில் இடம் பெற்றுவரும் மனித உரிமை மீறல் களை எதிர்கொள்ளவும் அமெரிக் காவின் உத்தேச தாக்குதலின் பின் விளைவுகளைக் கண்காணிக்கவும் அங்கு தகுதி பெற்ற மனித உரிமை கண்காணிப் பாளர்கள் போதியளவு நிலை நிறுத்த வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப பாளர்கள் தமது நாட்டுக்குள் வருவதை ஈராக் நீண்டகாலமாக நிராகரித்து வந்துள்ளது. அத்துடன் அங்கு மனிதஉரிமை மீறல்கள் இடம் பெறுவதாகக் கூறும் மேற்கு நாடுகளின் குற்றச்சாட்டையும் அது நிராகரித்துள்ளது.

எனினும் அமெரிக்காவும் பிரிட்டனும் ஈராக்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் உத்தேச யுத்தத்திற்கு ஒரு காரணமாகக் கூறிவருகின்றன. இதேவேளை மனித உரிமைகள் தொடர்பான விசேட விசாரணையாளர் ஒருவர் கடந்த வருடம் ஈராக் வர அனுமதிக்கப்பட்டுள்ளார். 10 ஆண்டுகளின் பின்னர் இவ்வா றான விசாரணையாளர் ஒருவர் ஈராக் வர அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதாரத்தில் தேக்கம்

எரிபொருட்களின் விலை உலகச் சந்தையில் நாளுக்குநாள் ஏறிக்கொண்டிருப்பதால் அமெரிக் கப் பொருளாதாரத்தில் தேக்க நிலை ஏற்படுவதாக தெரிவிக்கப் படுகிறது.

அமெரிக்காவில் மட்டுமல்லாமல் ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் இது பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதற்கு முக்கிய காரணம் ஈராக் போர் எந்த நேரத்திலும் வெடிக்கலாம் என்ற அபாய சூழ்நிலைதான் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## காஷ்மீரில் பனிப்புயலில் சிக்கி 10 இந்.இராணுவத்தினர் மரணம்

(புதுடில்லி)

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் கடு மையான பனிப்புயல் வீசியுள்ளது.

இந்த பனிப்புயலில் சிக்கி ஜம்முகாஷ்மீரின் எல்லைப் பகுதி யில் காவல் கடமையில் ஈடுபட்டி ருந்த பத்து இராணுவத்தினர் உயிரிழந்துள்ள தோடு ஏழு இராணுவத்தினர் காணாமல் போயுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## ஈராக்கைச் சேர்ந்த ஐ.நா. பணியாளர் இருவரை நாட்டைவிட்டு வெளியேற அமெ. உத்தரவு

(வாஷிங்டன்)

ஈராக்கைச் சேர்ந்த இரண்டு ஐக்கிய நாடுகள் சபை ஊழியர் களை நாட்டைவிட்டு வெளியேறும் படி அமெரிக்கா உத்தரவிட் டுள்ளது. தமது பணிக்குச் சம்பந்தமில்லாத நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டதான குற்றச் சாட்டின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இவ்விரு பணியாளர்களும் ஐ.நா.சபை பணியாளர்களாக கூறப்பட்டாலும் அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஐ.நா. ஊழியர்கள் அல்ல. இது போல் வெளிநாடுகளில் அமெரிக்க நலன் களுக்கு ஏதும் பிரச்சினை செய்யக்கூடும் என்ற அடிப்படை யில் 60 நாடுகளிலுள்ள 300 ஈராக் கிய தூதர்களை வெளியேற்றும் படியும் அந்நாடுகளை அமெ ரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

## பின்லேடனைத் தேடும் பணியில் அமெ., பாக். படைகள் தீவிரம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தென்மேற்கு மாகாணத்திலும் மற்றும் வடபகுதி யிலும் அல்ஹைதா தலைவர் ஒசாமா பின்லேடனைத் தேடும் பணியை பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கப் படையினர் முடுக்கி விட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகே பலுசிஸ்தான் அல்லது வடமேற்கு பிரான்ஜியர் மாகாணத் திலே ஒசாமா பின்லேடன் மறைந்திருக்கும் சாத்தியக்கூறு நிலவுவதாக பாகிஸ்தானிய பாதுகாப்புத்துறையின் மூத்த அதிகாரி ஒருவர் இஸ்லாமாபாத் தில் தெரிவித்துள்ளார்..

இதனிடையே ஒசாமா பின்லேடன் உயிருடன்தான் இருக்கின்றார் எனவும் அவர் தீவிர இஸ்லாமிய வாதிகளின் பாதுகாப்புடன் பாகிஸ்தானில் வாழ்கிறார் எனவும் கட்டாரிலி ருந்து ஒளிபரப்பப்படும் அல்ஜசீரா தொலைக்காட்சி தெரிவிக்கின்றது. ஒசாமாவினால் எழுதப்பட்ட கடிதங்கள் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட காலித்ஷேக் முகமத்திடம் இருந்ததாக இந்த தொலைக்காட்சி கூறுகின்றது.



பலஸ்தீனரின் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில் சேதமடைந்துள்ள இஸ்ரேலியப் பேருந்து




ஈராக் மீதான தாக்குதலிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பிலிப்பைன்ஸ் மக்கள்



01. ஆகாய விமானம் செய்யப்பயன்படும் கலவை எது?
☐ டியுறலுமினின்

02. சந்திரனை நெருங்கிய முதல் செய்மதி எது?
☐ மெக்டா

03. பூமியில் காணப்படும் மிகச் சிறிய முலையூட்டி எது?
☐ மூஞ்சூறு

04. பீங்கான் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மண் எது?
☐ கயோலின்

05. வான்வெளியில் செயற்கைக் கோள் செலுத்த முடியும் என்று கண்டறிந்தவர் யார்?
☐ நியூட்டன்

06. மது அருந்தும் போது உடலில் எந்த உறுப்பு உறிஞ்சிக் கொள்கின்றது?
☐ இரைப்பை

07. ஆபிரிக்காவிலுள்ள நைல் நதியின் வேறு பெயர் என்ன?
☐ நிலாநதி

08. ட்ரான்ஸ் போமரை (மின்மாற்றி) வடிவமைத்தவர் யார்?
☐ அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம்ஸ் ஸ்டான்லி

09. சிம்பாப்வே எப்போது சுதந்திரம் பெற்றது?
☐ 1980ஆம் ஆண்டில்

10. இலங்கையில் கோள் மண்டபம் நிறுவ உதவிய நாடு எது?
☐ ரஷ்யா

11. உலகிலேயே மிக நீளமான புகையிரத நிலையம் உள்ள நாடு எது?
☐ சுவீடன்

12. இளம் சிவப்பு நகரம் என்று வர்ணிக்கப்படும் நாடு எது?
☐ ஜெய்ப்பூர்

13. சார்க் மாநாட்டின் செயலகம் எங்கே, எப்போது நிறுவப்பட்டது?
☐ நேபாளத்தில், 1987இல்

14. உலகின் மிகப் பெரிய கம்யூனிச நாடு எது?
☐ சீனா

15. ஆசியாவில் உள்ள ஒரே ஒரு கிறிஸ்தவ நாடு எது?
☐ பிலிப்பைன்ஸ்

16. தங்க முக்கோண வலய நாடுகள் என அழைக்கப்படும் நாடுகள் எவை?
☐ மியான்மார், தாய்லாந்து, லாவோஸ்

17. உலகின் மிகப் பெரிய இஸ்லாமிய நாடு எது?
☐ இந்தோனேசியா

18. உலகின் பூச் வீடு என அழைக்கப்படும் நாடு எது?
☐ ஹவாய்


19. மிக உயரத்தில் கூடுகட்டும் பறவை எது?
☐ கழுகு

20. திணிவு மாறாத விதியைக் கண்டுபிடித்தவர் யார்?
☐ லாவோசியர்

21. சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தின் தலைமையகம் எங்குள்ளது?
☐ லண்டன்

# பைசாநகரத்துச் சாய்ந்த கோபுரம்

## (Leaning Tower of PISA)



எந்த நிமிஷம் விழுந்துவிடப் போகிறதோ என்னும் எதிர்பார்ப்பை உலக மக்களுக்கு ஊட்டி விட்டு வேடிக்கை பார்க்கிற கோபுரம் ஒன்று உண்டு என்றால் அது பைசாநகரத்து சாய்ந்த கோபுரந்தான். இது இத்தாலி நாட்டின் முக்கிய நகரங்களுள் ஒன்றான பைசா நகரத்தில் உள்ளது.

அச்சத்தையும், திகிலையும் உண்டாக்கிவிட்டு, சாய்ந்து விழாமல் கடந்த 270 ஆண்டுகளாக சாய்ந்த வண்ணமாகவே நின்று கொண்டிருக்கும் இந்த அதிசய கோபுரம், நாட்டில் 'போஸ்' கொடுத்துக் கொண்டு நிற்கிறது.

கோபுரத்தின் மூன்றாவது அடுக்கு கட்டிமுடித்த பின்பே சாய்ந்த நிலை ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. மூன்று அடுக்கு வரை சாய்கின்ற சூசகமே தென்படவில்லை. 1911 ஆம் ஆண்டில் இது எந்த அளவுக்குச் சாய்ந்து காணப்படுகிறது என்று கணக்கிடத் தொடங்கினர். அப்பொழுது முதல் ஆண்டொன்றுக்கு 1.25 மில்லி மீற்றர் என்ற அளவில் இந்தக் கோபுரம் சாய்ந்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

புகழ்பெற்ற அறிவுலக மேதையான கலிலியோ, தனது புவியீர்ப்பு ஆய்வை இந்தச் சாய்ந்த கோபுரத்தின் உச்சியிலிருந்துதான் பரிசோதனை செய்து பார்த்தார் எனக்கூறுவர். 1589ஆம் ஆண்டில் அவர் அந்த ஆராய்ச்சியை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கோபுரம் ரோமானியக் கலைநுட்பத்துடன் முழுவதும் பளிங்குக் கற்களால் கட்டப் பெற்றது. இதன் உயரம் 177அடி (56மீற்றர்) என்பதாம். இதன் சுவர்கள் 13 அடி (4மீ) கனமுள்ளது. அடிப்பாகம் மட்டுமே இந்த அளவுகனத்தில் கட்டப்பட்டது. பின் படிப்படியாக கனத்தின் பரிமாணம் குறைந்து உச்சியில் இதன் கனம் 6 முதல் 7 அடி (1.8 முதல் 2.1மீ) என்ற அளவில் உள்ளது. இதன் சுவர்களுக்கிடையே ஒவ்வோர் அடுக்கிலும் 30தூண்கள் கலைநுட்பத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. அடித்தளத்தில் 15 தூண்களும் உச்சியில் 12தூண்களும் உள்ளன. இது மொத்தம் 8 அடுக்குகள் கொண்டதாகும். கோபுரத்து உச்சியில் கட்டடக் கலைஞரின் கைவண்ணம் பளிச்சிடுகின்றது.

இந்தச் சாய்ந்த கோபுரத்தின் உச்சிக்குச் செல்வதற்குப் படிகள் உள்ளன. அடித்தளத்திலிருந்து உச்சி வரையிலும் மொத்தம் 300 படிகள் அமைக்கப் பெற்றுள்ளன. உச்சியில் மணிகள் பொருத்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. அவை முதன்முதலாக எப்பொழுது ஒலியெழுப்பத் தொடங்கின என்பதற்கு எந்த விவரமும் இல்லை.

ஆனால் ஒன்று மட்டும் உறுதி. இந்தக் கோபுரம் ஆண்டொன்றுக்கு 1.25 மி. மீற்றர் என்ற விகிதத்தில் சாய்ந்து கொண்டிருக்கிறது. இன்று 17 அடி (54 மீ) சாய்ந்துள்ளது. இது என்றேனும் ஒருநாள் அடியற்ற மரமாகிவிடும் என்பது உறுதி. எனவே பொறியியல் வல்லுனர்கள் இக்கோபுரத்தின் சாய்வுத் தன்மையைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றனர். உலக அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இந்தக் கோபுரத்தின் சாய்வுத்தன்மையை நிறுத்திக் கொள்ள முடியுமா? என்பது பல்வேறு முயற்சிகளின் மத்தியில் தற்போதும் கேள்வியாகவே உள்ளது.

# உயிரைக் காப்பாற்றும் புதிய பேஸ் மேக்கர்

அமெரிக்காவில் உயிரைக் காப்பாற்றும் புதிய வகையான பேஸ் மேக்கர் கருவியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதயத்தின் தசைகள் பலவீனமடையும் போது இதயத்தின் செயற்பாடு குறைகிறது. அதைத் தடுக்க பேஸ் மேக்கர் என்ற கருவி பொருத்தப்படுகிறது. அது இதயத்தின் துடிப்பைச் சீராக்கி இதயத்திலிருந்து உடலின் மற்றப் பாகங்களுக்கு தேவையான இரத்தம் செல்ல வழி செய்கிறது. இப்போது அமெரிக்காவில் புதிய வகையான பேஸ் மேக்கர் கருவியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதை 1500 இதய நோயாளிகளின் உடலில் பொருத்தி பரிசோதனை செய்தனர். சாவு விகிதத்தை 51 சதவீதம் அந்த புதிய பேஸ் மேக்கர் கருவி குறைத்து இருப்பது நிரூபணமானது. பழைய பேஸ் மேக்கர் கருவியில் இருந்து அந்த நவீன பேஸ் மேக்கர் கருவி முற்றிலும் வித்தியாசமான முறையில் செயற்படுகிறது. அதேசமயம் அதன் விலை சாமானியர்கள் வாங்க முடியாத அளவுக்கு இருக்கிறது. ஒரு பேஸ் மேக்கர் கருவியின் விலை 21,739 டொலர்கள் முதல் 45,752 டொலர்கள் வரையாகிறது. ஆனாலும் அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான மக்கள் அந்த பேஸ் மேக்கர் கருவியின் உதவியுடன்தான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். (சசி)

# செவ்வாய்க்கிரகப் பனி உருகினால் பெருங்கடல்கள் உருவாகும்

செவ்வாய்க் கிரகப்பனி உருகினால் பெருங் கடல்கள் உருவாகும் எனப் புதிய தகவல் வெளியாகியுள்ளது. பூமி தவிர பிற கிரகங்களில் தண்ணீர் இருக்கிறதா? என்பதுதான் இப்போது விண்வெளி ஆராய்ச்சியின் பிரதான பணியாக நடந்து வருகிறது. செவ்வாய்க் கிரகத்தில் ஈரம் இருப்பதாகப் பல ஆய்வு முடிவுகள் தெரிவித்தன. இப்போது செவ்வாய்க்கிரகத்தைப் பற்றி புதிய ஆய்வுத் தகவல் வந்துள்ளது. நவீன அறிவியல் தொடர்பான அமெரிக்க மையம், செவ்வாய்க்கிரகத்தைச் செயற்கைக்கோள் மூலம் ஆராய்ந்ததில், அந்தக் கிரகத்தின் பெரிய பிரதேசமே பனி படர்ந்து இருப்பதைக் கண்டுபிடித்துள்ளது. அது உருகினால் செவ்வாய்க்கிரகத்தில் பெருங்கடல்கள் உருவாகும் என ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# கதிர்வீச்சு தாக்காத துணி...!

முதன்முதலாக கதிர்வீச்சு தாக்காத துணியை அமெரிக்காவைச் சேர்ந்த ரேடியேசன் ஷீல்ட் டெக்னோலஜிஸ் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. கதிர்வீச்சில் இருந்து காத்துக்கொள்ள இதுவரை உலோகங்கள்தான் தடுப்புக் கவசமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதற்கு டெம்ரான் என்றுபெயர். அந்த டெம்ரான்பொலியெதிலின் மற்றும் பி.வி.சி. கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. மருத்துவச் சிகிச்சைக்காக எக்ஸ்ரே எடுக்கிற போது மருத்துவ உதவியாளர்கள் கதிர் இயக்கத் தாக்கத்திலிருந்து தங்களைக்காத்துக் கொள்ள அணிவதற்காகத்தான் அத்துணி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் கதிர்வீச்சு தாக்காத கூடாரம் அமைக்கவும், விமானத்தில் கதிர்வீச்சுத் தாக்கத்தைத் தடுக்க ஒட்டவும் பயன்படுத்தலாம். (சசி)

# அமெரிக்கக் கண்டம்

### வட அமெரிக்கா

பரப்பளவில் மூன்றாவது பெரியது. வடக்கில் ஆர்டிக் கடல்,தெற்கில் தென் அமெரிக்கா: மக்கள் தொகையில் நான்காவது பெரியது.

உலகின் மிகப்பெரிய தீவு(கிறீன்லாந்து) மற்றும் உலகின் மிகப்பெரிய நன்னீர் ஏரி (லேக் சுப்பீரியர்) போன்றவை இங்கு உள்ளன. மக்கள் தொகை:43,20,00,000 (1994)மக்கள் நெருக்கம்: சதுர கி.மி. க்கு 18 பேர். மொத்தப்பரப்பு: 2,42,37,000 ச.கி.மீ வடக்கு-தெற்கு தூரம்:7200 கி.மீகிழக்கு-மேற்கு தூரம் :6400 கி.மீ வடக்கு-தெற்கு தூரம் (தீவுகள் உள்ளடக்கி):8,900 கி.மீ. கிழக்கு மேற்கு தூரம்-(தீவுகள் உள்ளடக்கி):8,900கி.மீ கடற்கரை :3,00,000 கி.மீ. மிக உயர்ந்த பகுதி: அலாஸ்காவிலுள்ள மெக்கினலி(கடல் மட்டத்திலிருந்து 6194மீ) மிகத்தாழ்ந்த பகுதி: சாவுச் சமவெளியின் (Death Velly) அருகேயுள்ள பேட்வாட்டர் (கடல் மட்டத்திலிருந்து 86 கி.மீ) நாடுகள்: அமெரிக்கா,ஆன்டிகுவா,எல்சால்வடோர், கனடா, கோஸ்டா,ரீகா,கியூபா,குவாதிமாலா, ஜனமகா, டொமினிக்கா, டொமினிகன் குடியரசு, நிகரகுவா,பனாமா, பகாமாஸ், பார் படோஸ்,பெலிஸ், மெக்சிக்கோ, செயின்ட் லூசியா,செயின்ட் வின்சென்ட், ஹைதி, ஹோண்டுராஸ்.

### தென் அமெரிக்கா

பரப்பளவில் நான்காவது பெரியது. மக்கள் தொகையில் ஐந்தாவது பெரியது. உலகின் மொத்தப் பரப்பளவில் 12 சதவிகிதமும்,மக்கள் தொகையில் 06 சதவிகிதமும் உள்ளன. உலகின் பெரிய வெப்பநிலைக்காடுகள் இக்கண்டத்தின் அமேசன் ஆற்றுப்படுக்கையில் அமைந்துள்ளன. வடக்கு சிலியில் உள்ள அட்டகாமா பாலைவனம், உலகின் மிக வறட்சியான பகுதிகளில் ஒன்றாகும்.

மக்கள் தொகை: 31,80,00,000 (1994)மக்கள் நெருக்கம்:சதுர கி.மீ.க்கு18 பேர். மொத்தப் பரப்பு:1,78,32,000 ச.கி.மீ வடக்கு-தெற்கு தூரம்:7,645கி.மீ.கிழக்கு-மேற்கு தூரம்:5,150 கி.மீ கடற்கரை: 32,000 கி.மீ

நாடுகள்: ஆஜென்டீனா,ஈக்வாடர்,உருகுவே, கொலம்பியா,கயனா, கிரெனடா, சிலி,டிரினிடாப், டொபாகோ,பரகவே,பெரு, பொலிவியா,பிரேசில், வெனிசுவெலா,சுரினாம்.

# ஐரோப்பாக் கண்டம்

மேற்கத்திய நாகரிகத்தின் பிறப்பிடம். உலக வரலாற்றில் ஐரோப்பாவைப் போல் வேறெந்தக் கண்டமும் இதனளவிற்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதில்லை. இதன் வடபகுதியில் ஆர்டிக் பெருங்கடல்,தென்பகுதியில் மெடிட்டரேனியன்கடல், மேற்கில் அட்லாண்டிக் பெருங்கடல், கிழக்கில் ஊரல் மலைகள் எல்லைகளாக அமைந்துள்ளன.

பூமியின் ஏனைய கண்டங்களை விடச் சிறியது(அவுஸ்ரேலியா தவிர்த்து) உலக மொத்த மக்கள் தொகையில் எட்டில் ஒரு பங்கு பேர் இங்கு வசிக்கின்றார்கள். மக்கள் தொகை71,00,000(1994) மக்கள் நெருக்கம்: சதுர கி.மீ.க்கு 68 பேர் மொத்தப்பரப்பு:1,04,45,000 ச.கி.மீகிழக்கு-மேற்கு தூரம்:சுமார்6,400 கி.மீ வடக்கு-தெற்கு தூரம்: சுமார் 4,800 கி.மீ.கடற்கரை: 60,973கி.மீ. மிக உயர்ந்த பகுதி: மவுண்ட் எல்ப்ரஸ்(கடல் மட்டத்திலிருந்து 5,633மீஉயரம்) மிகத் தாழ்ந்த பகுதி: காஸ்பியன் கடற்கரை (கடல் மட்டத்திலிருந்து 28 மீ தாழ்வு)மிகப்பெரிய ஆறு:வால்கா(3531 கி.மீ ரஷ்யா வழி சென்று காஸ்பியன் கடலில் கலக்கின்றது)

நாடுகள்:-அண்டோரா, அயர்லாந்து,அல்பேனியா, இத்தாலி, ஐஸ்லாந்து, ஒஸ்ரியா,கிரிஸ், செக்கோஸ், லேவியா, ஜேர்மனி, டென்மார்க், நெதர்லாந்து,நோர்வே, போலாந்து, போத்துக்கல், பின்லாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், பல்கேரியா,பிரிட்டன், மால்டா, மொனாக்கோ, யூகோசிலாவியா, லக்சம்பேர்க், லிச்டென், ஸ்பெயின், வத்திக்கான்,சான்மரினா, ஸ்பெயின், சுவிஸ்லாந்து, சுவீடன், ஹங்கேரி, ருமேனியா.

# வேற்று நாட்டுப் பழமொழிகள்

☐ நரி உபதேசம் செய்யத் தொடங்கினால் உன் கோழிகளைக் கவனி (அல்போனியா)

☐ நாய்களின் பிரார்த்தனை எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் வானம் எலும்பு மழைபொழியும். (துருக்கி)

☐ ஒவ்வொரு பொய்யும் ஒவ்வொரு பல்லைத்தட்டி விடுமானால், பலருக்குப் பல்லே இருக்காது.(சுவீடன்)

☐ இரு வழுக்கைத்தலையர்கள் ஏன் ஒரு சீப்புக்காகச் சண்டை செய்ய வேண்டும்.(ரஷ்யா)

☐ நீர் அமைதியாக இருப்பதனால் முதலைகள் இல்லை என்று நம்பாதே(மலாயா)

☐ கரி சாம்பலைப் பார்த்து சிரிக்கின்றது.(ஆபிரிக்கா)

☐ கழுதையோடு நட்பு வைத்துக்கொண்டால், உதைகளை எதிர்பார்க்க வேண்டியது தானே.(இந்தியா)

☐ நெருப்பை நீ மறைக்க முடியும் புகையை என்ன செய்யப் போகின்றாய்? (அமெரிக்கா)

# உருவானது எப்படி

⇨ News எனும் சொல் North,East, West,South எனும் நான்கு சொற்களின் முதல் எழுத்துக்களால் ஆனது என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

உண்மையில் News எனும் சொல் Novum அல்லது Novus எனும் இலத்தீன் சொல்லில் இருந்தே தோன்றியதாகக் கூறப்படுகின்றது.

⇨ Paper எனும் சொல்லும் Papyrus எனும் இலத்தீன் சொல்லில் இருந்தே உருவானது. Papyrus எனும் சொல் ஒரு மரத்தைக் குறிக்கும். இம்மரத்தின் பட்டை (Bark)யில் இருந்து பத்திரிகைகளுக்குத் தேவையான காகிதம் செய்யப்பட்டதாலேயே அக்காகிதம் Paper என அழைக்கப்படலாயிற்று.

⇨ Bulb எனும் ஆங்கிலச் சொல் Onion, Daffodil, Snowdrop எனும் தாவரங்களையே குறித்து நிற்கும். இச்சொல் (Bulb) Bulbus எனும் லத்தீன் சொல்லில் இருந்து பிறந்ததாகும்.

⇨ 1914 இல் தோமஸ் அல்வா எடிசன் கண்டுபிடித்த ஒரு சிறிய மின் குமிழ் மேற்படி தாவரங்களில் ஒன்றான வெங்காயத்தின் வடிவத்தினை ஒத்திருந்ததால் Bulp எனப் பெயரிட்டதாகக் கூறப்படுகின்றது.

# மருத்துவக் குறிப்புகள்

● தேயிலையில் சிட்டிகை ஓமம் சேர்த்தால் ஜலதோசம் தீரும்.

● சிறிதளவு ஓமத்தை எடுத்து, ஒரு துணி அல்லது கைக்குட்டையில் முடிந்து, மூக்கால் அடிக்கடி உறிஞ்சிக் கொண்டால், தலைப்பாரம்,தடிமன் நீங்கும்.

● பாலில் சிறிதளவு இஞ்சி, ஏலக்காய், ஓமம், அரைத்துக் கலந்து குடிக்க, இருமல்,சளி, தொண்டைக் கேளாறுகள் மாறும்.

● ஒலிவ் எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்யை கை விரல் மற்றும் கால் பாதங்களில் தேய்த்துவர, குளிரால் ஏற்படும் விறைப்பு மாறும்.

● உணவில், வெங்காயம்,பூண்டு, அதிகமாகச் சேர்த்தால், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி கூடும்.

● இஞ்சி,அல்லது சுக்கு உணவில் சேர்த்துக் கொண்டால், உடலில் வெப்பம் அதிகரிக்கும்.

● மிளகு ரசம் தயாரித்து சாப்பிட்டு வந்தால், உடல் குளிர் குறைவதோடு தொண்டைக் கோளாறுகளும் நீங்கும்.

● பப்பாசி, வாழை,தக்காளி, இவற்றில் ஏதாவது ஒன்றின் சாறு எடுத்து முகத்தில் பூசி அரைமணி நேரம் ஊறியபின் கழுவிவர முகச் சுருக்கம் நீங்கும். முகம் உலர்ந்து போவதும் தடுக்கப்படும்.

● உதடுகளில் வெண்ணெய், தேங்காய் எண்ணெய்,கிளிசரின், இவைகளில் ஏதாவது ஒன்றை உதட்டில் பூசிவர உதட்டு வெடிப்பு மாறும்.

● ரோஜா இதழ்களுடன் எலுமிச்சை சாற்றை விட்டு அரைத்துப் பூசி னாலும் உதடு வெடிப்பு மாறும்.

● நல்லெண்ணையை சூடாக்கி அத்துடன் சிறிதளவு மெழுகையும் போட்டால் களிம்பு போல் வரும் இதை கால் வெடிப்பு மேல் பூசினால் மாறும்.

● அப்பிள்,திராட்சை,தக்காளி, கரட், இவற்றை அடிக்கடி பச்சையாக சாப்பிட்டுவர, குளிரால் ஏற்படும் சளி, இருமல் மாறும்.

● இரவில் தினமும் மிளகுத்தூள், சாம்பிராணித் தூள்,மாவிலைப் பொடி ஏதாவது ஒன்றை நெருப்பில் போட்டு புகை ஏற்படுத்தினால் அறைக் காற்றிலுள்ள நோய்க் கிருமிகள் இல்லாது போகும்.

● வேப்பெண்ணையுடன், ஆமணக்கு எண்ணெய் கலந்து, கால்களில்,மூட்டுக்களில் பூச, வலிகள் குணமாகும்.

● இருமல்,சளி,மூச்சுத்திணறல் போன்றவற்றிற்கு தூதுவளைரசம் சிறந்தது.

# சிந்தனைக்கு

*கொஞ்சம் நட்பை இழப்பதை விட, கொஞ்சம் பணத்தை, இழப்பது மேலானது.

* குருட்டுக் கண்ணை விட, கோணற் கண் மேலானது.

*தீயார் நேசத்தை விட, தனிமை மேலானது.

*பட்டாடை அணிந்து நரகம் செல்வதை விட, கந்தையணிந்து சுவர்க்கம் செல்வது மேலானது.

*கதவைத் திறந்து வைப்பதை விட, ஒரு மரப் பூட்டுப் போடுவது மேலானது.

*தொடங்கிப் பாதியில் விட்டு விடுவதை விட, தொடங்கா திருப்பது மேலானது.

*தூக்கியெறியும் குதிரையை விட,சுமந்து செல்லும் கழுதை மேலானது.

*05 நாட்கள் விரதமிருப்பதை விட, ஒரு நல்ல காரியம் செய்வது மேலானது.

* உனக்கு முழு நம்பிக்கை வந்துவிட்டது என்றால்,முன் வைத்த காலைப் பின் வைக்காதே.

*புகழின் பின்னால் நீ போனால் அது பொய் மான்,புகழ் உன் பின்னால் வந்தால் அது நிஜமான். அப்போதுதான் அதற்கு நீ எஜமான்.

*உனது குறையை உனக்கு மட்டுமே சுட்டிக் காட்டி, மற்றவர்களிடம் அதனை மறைத்து விடுகின்றவனே நம்பத்தகுந்த நண்பன்.

*சிரித்து வாழ், பிறரைச் சிரிக்கச் செய்து வாழ், பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே.

# தெரிந்து கொள்

☐ உலகப் புகழ்பெற்ற 'மோனா லிசா' ஓவியமும், 'கடைசி விருந்து' என்ற ஓவியமும் முழுக்க முழுக்க இடக்கையினால் வரையப்பட்ட ஓவியங்களாகும்.

☐ முதலாம் எலிஸபெத் அரசி காலத்தில் குளிக்காமல் இருப்பது நாகரிகமாகக் கருதப்பட்டது. இதனால் எலிஸபெத் அரசி மாதம் ஒரு முறைதான் நீராடி மகிழ்வாராம்.

☐ ஐரிஷ் நாட்டுப் பானம் தான் உலகிலேயே போதை தரக் கூடிய பானம் ஆகும். காரணம், பானத்தில் சிறிதளவு விஸ்கியும் கலந்துதான் இந்நாட்டில் பருகப்படுகின்றது.

☐ உலகிலேயே சிக்கனத்திலும் சேமிப்பிலும் மிகுந்த அக்கறை காட்டி பணத்தை சேமித்து வைக்கும் மக்கள் உள்ள ஒரே நாடு ஸ்விட்சர்லாந்து தான். பணக்கார நாடுகள், ஏழை நாடுகள் என்று ஒரு பட்டியல் போடலாம். ஆனால், ஒவ்வொரு தனி நபரும் சேமிப்பில் அக்கறை காட்டும் நாடுகளின் பட்டியலில் இந்த ஒரு நாடு மட்டுமே இடம்பெற்றுள்ளது.

☐ உலகிலேயே மிகப் பெரிய உப்புச் சுரங்கம் போலாந்து நாட்டில் இருக்கின்றது. இந்தச் சுரங்கத்திற்குள் 70மைல் நீளத்திற்குச் சாலைகளும் உண்டு. சுரங்கத்திற்குள் வேலை பார்ப்பவர்களின் வசதிக்காகச் சிற்றுண்டிச் சாலைகளும் பூமிக்கு அடியில் உள்ளன.

☐ இரத்தப் பிரிவுகளில் 'ஏ' (A) பிரிவு இரத்தத்தை உடையவர்களையே நோய்கள் அதிகமாகத் தாக்குகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

☐ வெள்ளைப் பூண்டு - வெள்ளையும் சிவப்பும் கலந்து காட்சிதரும் லில்லி எனும் மலர்க் குடும்பத்தைச் சேர்ந்தது.

☐ உலகில் முதல் முதலில் பெர்லின் நகரில்தான் தொலைபேசி இணைப்பு1881 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

" வாட்சன்! தயவு செய்து இங்கே வாருங்கள்" இதுவே முதல் முதலில் பேசப்பட்ட தொலைபேசிச் செய்தி. செய்தியைப் பேசியவர் தொலைபேசியைக் கண்டுபிடித்த "அலெக்சாண்டர் கிரகம்பெல்" செய்தியைக் கேட்டவர் வேறொரு தளத்திலிருந்து கிரகம் பெல்லின் உதவியாளர் தாமஸ் வாட்சன்.

இன்று நாம் பயன்படுத்தும் தொலைபேசியின் அடிப்படை அம்சங்களை 1861 ஆம் ஆண்டில் ஜெர்மனியைச் சேர்ந்த ஜே.பி.ரெய்ஸ் என்பவர் கண்டுபிடித்தார்.

# அனைத்துலக பெண்கள் தினம் மார்ச்-08

**எம்மினிய ஈழமக்களே!**

"உலகம் தாய்மையின் காலடியில் உருள்வதால் நான் பெண்மையைப் போற்றுகிறேன். இங்கு என் தங்கைகள் படைக்கும் சாதனைகளால் தலை நிமிர்ந்து கொள்கின்றேன்." என்றார் எம் தேசியத் தலைவர். இன்று அனைத்துலகப் பெண்கள், உரிமைக் குரலெழுப்பும் முக்கியமான நாள்.

சமூகத்தில் சரிபாதியினர் ஓயாது உழைக்கின்ற உழைப்பாளிகள், உலகுக்கு உயிர் கொடுக்கின்ற உன்னதங்கள். உலக அரங்கில் தம் உரிமைக் குரலை உரத்து எழுப்புகின்ற நாள் இது. நாடுகள் வேறாக இருந்தாலும், மொழிகள் வேறாக இருந்தாலும், பண்பாடு வேறாக இருந்தாலும் பெண்கள் என்ற வகையில் நாங்கள் இன்று ஒன்றிணைகின்றோம். விஞ்ஞானியாக, விண்வெளியை ஆய்பவளாக, கவிஞையாக, கலைஞராக, மருத்துவராக, பொறியியலாளராக, போராளிகளாக இன்று பெண்கள் சாதனை படைக்கும் களம் ஆயினும் இன்றைய நாடுகளின் உண்மைக் கதைகள் இன்றும் ஏராளமாகத் தானே இருக்கின்றது. உலகப் பெண்களில் நாங்கள் வித்தியாச மானவர்கள்.

"ஆழவேரோடிய சமுதாய வரன் முறைகளைக் கடந்து வேலித்திரைக்குள் இருந்து விட்டு வெளிச்சத்தைச் சந்திக்கின்ற பெண்கள் ஆயிரம் ஆயிரம். ஆணுக்கும் பெண்ணுக்கும் ஆளுமை பொதுவானது என்பதுணர்ந்து தன் ஆளுமையை மண்ணிலிருந்து விண்வரை வளர்ந்த பெருந்தகைகள். ஆயிரமாயிரம் போர்க்களங்களில் தளபதிகளாக, அரசியல் அரங்குகளில் தலைவிகளாக, எங்கும் எதிலும் முன்னணியில் மிளிர்கின்ற பெண்கள் சமூகம் தலைமைத்துவப் பண்போடும் தன்னம்பிக்கையோடும் தனித்துவமாய் வளர்கின்ற தேசம் எம்முடையது.

நாட்டு விடுதலைக்காக மட்டுமன்றி எமது மனவீட்டின் அடிமைத் தளையில் இருந்தும் நாம் விடுபட வேண்டும். இந்த நவீன யுகத்தில் உலகம் மிக வேகமாக முன்னேற்றமடைந்து கொண்டிருக்கின்ற இந்தச் சூழலிலும் இன்னமும் நாங்கள் எமது ஆளுமைகளை உணராமல், எமது வலிமை எமக்கே தெரியாமல், இதிகாச புராணங்களினது மூடநம்பிக்கைகளினது சமய சம்பிரதாயங்களினதும் கருத்துக்களால் சூழப்பட்டு அதற்குள் மூழ்கி மெல்லியர்களாக வளர்ந்து கொண்டிருக்கின்றோம். வளர்கிறோம் என்பதைவிட, வார்த்தெடுக்கப்படுகிறோம். சமூக அச்சுக்களால் வார்தெடுக்கப்பட்ட களிமண்ணாக எம்சமூகம் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் நாமும் இழுபடுகிறோம்.

எமக்குத் தேவை எமது தேசத்தின் முன்னேற்றம், எமது தேசத்தின் ஆரோக்கியம், எமது தேசத்தின் அபிவிருத்தி, எமது தேசத்தின் விடுதலை, ஒரு தேசம் விடிய வேண்டுமானால் அந்தத் தேச மக்கள் அனைவரும் விழிப்படைய வேண்டும். சமூகத்தின் சரிபாதியினரான பெண்கள் விழிப்படையா விட்டால் எந்த முன்னேற்றத்தை நாங்கள் காண முடியும்? தேசம் எப்படி விடிய முடியும்?

எமது உரிமைகளைத் தெரிந்து கொள்வோம். எமது ஆளுமையை உணர்ந்து கொள்வோம். அதை வளர்ப்பதற்கான வழிகளைத் தேடிக் கொள்வோம். "உயர்ந்தவர்கள் நாம் எல்லோரும் உலகத்தாய் வயிற்று மைந்தர். நசிந்து இனிக் கிடக்க மாட்டோம். நாம் எல்லாம் நிமிர்ந்து நிற்போம்" என்று உறுதி எடுத்துக் கொள்வோம்.

"நமது நிமிர்வே நாட்டின் நிமிர்வு"
"எமது உயர்வே நாட்டின் உயர்வு"

**பெண்கள் அமைப்பு,**
**கிளி. மாவட்டம்.**

# அடிப்படை உரிமைகளுடனான நிரந்தர சமாதானமே எமக்குத் தேவை

## - தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு - கிழக்கு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டு அடிப்படை அரசியல் உரிமைகளுடனான நிரந்தர சமாதானமே எமது மக்களுக்குத் தேவை என்பதை நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக இடம்பெற்ற பெண்களுக்கான முதலாவது உபகுழுக் கூட்டத்தில் வலி யுறுத்திக் கூறியுள்ளோம். பால் விவகாரம் தொடர்பான உபகுழுக்கூட்டத்தில் புலிகள் தரப்பு பிரதிநிதிகளுக்குத் தலைமை தாங்கிய தமிழீழ அரசியல் துறையின் மகளிர் பொறுப்பாளர் தமிழினி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அவசியமான நடவடிக்கைகள் குறித்து எமது உபகுழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதை உயர் மட்டப்பேச்சுக் குழுவிற்கும், 'சிரான்' அமைப்பிற்கும் அனுப்ப இருக்கின்றோம்.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதுவரை காலமும் மிக நீண்ட காலமாக, எங்களுடைய தமிழ் மக்கள் ஒரு அடக்குமுறை யுத்தித்திற்கு உட்பட்டு இருந்தவர்கள், அடக்கப்பட்ட எங்களுடைய மக்களின் உணர்வுகளை வெளி உலகமோ, தென் இலங்கையில் வாழ்கின்ற மக்களோ புரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் முற்று முழுதாகவே இல்லாமல் இருந்தது. இந்தச் சமாதான நடவடிக்கைகள் மூலமாக எங்களுடைய உணர்வுகளை, எங்களுடைய பிரச்சினைகளை, எங்களுடைய தேவைகளைத் தென்னிலங்கையில் வாழ்கின்ற மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் நாங்கள் முன்வைக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

மனிதாபிமான உடனடி நடவடிக்கைக்காக அமைக்கப்பட்டிருக்கும் 'சிரான்' குழுவுக்கும், வெளி உலகத்திற்கும் கொண்டு செல்லும் பிரதான பணியை இந்த உபகுழு செய்யும். இந்த உபகுழு சந்திப்பு மூலமாக தென்னிலங்கையில் இருக்கின்ற பெண்கள், அரச தரப்புப் பிரதிநிதிகளாக இங்கு கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் நாங்கள் எங்களுடைய மக்களின் அவலங்களை, துன்பங்களை எங்களுடைய பெண்களின், குழந்தைகளின் அவலங்களை, இதுவரை காலமும் அவர்கள் சந்தித்த அந்த நெருக்கடிகளை மிகவும் விளக்கமாக எடுத்துக் கூறி இருக்கின்றோம்.

எமது மக்கள் சமாதானத்தில் நம்பிக்கையுடனும் சமாதானத்தின் மீதான எதிர்பார்ப்புடனும் இருக்கிறார்கள். ஆனால், அந்த நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்புக்கும் அச்சுறுத்தலைத் தருவது சிங்கள பேரினவாத சக்திகளுடைய செயற்பாடுகள். கலந்து கொண்டிருக்கும் அரசதரப்பு பெண் பிரதிநிதிகளிடம் நாங்கள் கேட்டிருக்கிறோம். இந்தச் சமாதானத்துக்கு எதிரான பேரினவாத சக்திகளின் பொய்ப் பிரச்சாரத்தை எதிர்த்து சிங்கள மக்களுக்கு இந்தசமாதானத்தின் தேவையை உணர்த்தி, அவர்களை இந்தச் சமாதானத்திற்காக அணிதிரளச் செய்ய வேண்டும் என்று. நாங்கள் பெண்களின், குழந்தைகளின் ஒட்டு மொத்தமான சமூகத்தின் அபிவிருத்தியைப் பற்றி நிறையக் கதைத்தோம். ஆனாலும் நாங்கள் மிகவும் வலியுறுத்திய விடயம் என்னவென்றால், இந்த அனைத்து செயற்பாடுகளும் நடைபெற வேண்டுமெனில் அதற்கு மிகவும் பொருத்தமான ஒரு புறச்சூழல் ஏற்படவேண்டும்.

ஆகவே, முக்கியமானது இந்தப் புறச்சூழல் எங்களுடைய மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளுடனான, அந்த நிரந்தரமான சமாதானம் எங்களுக்குத் தேவை என்று நாங்கள் குறிப்பிட்டு இருக்கின்றோம். இங்கு உள்ள பெண்களுடைய, இந்தச் சமூகத்தினுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். ஆனால், எங்களுடைய மக்கள் மீண்டும் தங்களுடைய சொந்த இடங்களில் மீளக்குடியமர வேண்டும் என்பதுதான் பிரதான பிரச்சினையாக இருக்கின்றது.

அதில் இருந்து தான் ஏனைய பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. ஆகவே அதை நாங்கள் மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்தி இந்த உபகுழுவில் இருந்து அந்த விடயத்தை இந்த 'சிரான்' குழுவிற்கும் உயர் மட்ட பேச்சுக் குழுவிற்குமாக நாங்கள் அனுப்புவது என்று தீர்மானங்களை எடுத்திருக்கின்றோம்.

பெண்கள், குழந்தைகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை தென்பகுதியிலிருந்து வந்தோர் ஒப்புக் கொண்டார்கள். ஆனாலும் நாங்கள் குறிப்பிட்டோம். இந்தப் பிரச்சினைகள் இனியும் தொடரக்கூடாது. நாங்கள் ஒரு உரிமையுடனான வாழ்க்கையைத்தான் வாழ விரும்புகின்றோம் என்று. அவர்கள் எங்களுடைய உணர்வுகளை, இந்தச் செய்திகளை நிச்சயம் தென்னிலங்கை வாழ் பெண்களுக்கு எடுத்துச் சொல்வோம் எனக் கூறினார்கள். நாங்கள் இன்னும் அடுத்து வரும் கூட்டங்களில் பல விடயங்களைப் பற்றி விவாதிக்கவுள்ளோம். இந்த உபகுழுவினுடைய வளர்ச்சி என்பது, வெறுமனே தத்துவ ரீதியான எழுத்துக்களிலும் தீர்மானங்கள் இயற்றலிலும் மட்டும் தங்கியிராமல் எங்களுடைய மக்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற ரீதியில் நாங்கள் மிகவும் கவனமாகவும் அக்கறையாகவும் இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒரு ஆசிரியரைக் கொண்ட தமிழ் வித்தியாலயம்

பண்டாரவளை கல்வி வலயத்துக் குட்பட்ட முத்துவானா தமிழ் கனிஷ்ட வித்தியாலயம் ஒரேயொரு ஆசிரியருடனேயே இயங்குவதாகப் பெற்றோர்கள் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

சுமார் 50 மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலை, 5 ஆம் வகுப்பு வரை கொண்டதாகவுள்ளது.

கல்விக் காரியாலய அலுவல்கள் நிமித்தம், மேற்படி அதிபர் விடுமுறையில் சென்றாலோ அல்லது வேறு தேவைகளுக்கு வெளியில் சென்றாலோ பாடசாலை அன்று மூடப்படும் பரிதாப நிலை காணப்படுகின்றது.

ஆசிரியர்கள் இல்லாமல் காலப்போக்கில் மூடப்படக்கூடிய நிலையில் உள்ள இப் பாடசாலை குறித்து கல்வித் திணைக்களம் கவனமெடுக்க வேண்டும் எனப் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

## விளையாட்டு உத்தியோகத்தர் இல்லை

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் விளையாட்டு உத்தியோகத்தர் இல்லாமை காரணமாக கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதிலே பல இடையூறுகள் ஏற்பட்டுள்ளதாக விளையாட்டுக் கழகங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பிட்ட சில விளையாட்டுக்களுக்கே கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக பல விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்ட முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியேற்றம் இடம் பெற்றுவரும் இப்பிரதேசத்தில் நீண்டகால இடைவெளிகளுக்குப் பின் பல கழகங்கள் விளையாட்டுக்களில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## - கண்டாவளைப் பிரதேசத்தில் -

# பொதுசன மாதாந்த உதவிப் பணம் வழங்கப்படும் திகதிகள்

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேசத்தில் 2003 ஆம் ஆண்டு தை, மாசி மாத பொதுசன மாதாந்த உதவிப் பணம் பின்வரும் திகதிகளில் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் பி.கா.மத்தியாஸ் அறிவித் துள்ளார். 13-3-2003, காலை 9.00- பி.ப.3.00 மணி வரை தருமபுரம் கிழக்கு/மேற்கு பகுதிக்கு தருமபுரம் கிழக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும், 14-03-2003 காலை 9.00-12.00 மணி வரை பிரமந்தனாறு பகுதிக்கு கிராமசேவகர் அலுவலகத்திலும், பி.ப. 1.00-மாலை 4.00 மணி வரை புன்னை நீராவிப் பகுதிக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும், 17-03-2003 காலை 9.00 - 11.00 மணிவரை குமரபுரம், உமையாள் புரம், பரந்தன் பகுதிகளுக்கு பரந்தன் கிராம அலுவலர் அலுவலகத்திலும், 19-03-2003 காலை 9.00 - 12.00 மணிவரை கல்மடுப் பகுதிக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும், பி.ப.1.00 - மாலை 4.00 மணிவரை புளியம்பொக்கணைப் பகுதிக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும், 20-03-2003 காலை 9.00 - 12.00 மணிவரை கண்டாவளைப் பகுதிக்கு பிரதேச செயலகத்திலும், பி.ப.2.00- மாலை 5.00 மணிவரை பெரியகுளம் பகுதிக்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும், 21-03-2003, காலை 9.00-4.00 மணிவரை தவறவிட்டப்பட்டோருக்கு பிரதேச செயலகத்திலும் வழங்கப்படவுள்ளது (14)

# கோயில் விக்கிரகங்களை திருடியோருக்குப் பிணை

## சாவகச்சேரி நீதிமன்றம் வழங்கியது

தென்மராட்சி நுணாவில் பூதவராயர் கோயிலில் இருந்த பெறுமதி வாய்ந்த விக்கிரகங்கள் மற்றும் சிற்பங்களைக் களவாடிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த ஆறு பேரை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை அனுமதியளித்துள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள நுணாவில் பூதவராயர் கோயிலில் இருந்து விக்கிரகங்கள் 08, எலி வாகனச் சிற்பம் 01 களவாடியமை மற்றும் அவற்றை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் ஆறு பேரும் சாவகச்சேரி பொலிசாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த மாதத்தின் முதலாம் வார காலப்பகுதியில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருந்ததாக பொலிசாரால் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, கண்டி வீதி திறக்கப்பட்டதையடுத்து, தென்னிலங்கையைச் சேர்ந்த கும்பல் ஒன்றின் உதவியுடன் குடாநாட்டில் கொள்ளையிடப்படும் அரும் பொருட்கள் கடத்திச் செல்லப்பட்டு விற்கப்படுவதாகப் பலரும் குற்றம்சாட்டி வருகின்றனர்.

**சிந்தனைக்கு**



சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப் போவதில்லை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 08-03-2003

## தேவையானதொன்றே!

சிறிலங்காப் பொலிசாருக்கென ஒழுக்கக் கோவை ஒன்றையும், சத்தியப்பிரமாண உறுதிமொழி ஒன்றையும் உருவாக்கப் போவதாக பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கதொன்றே. மறுவளமாகப் பார்த்தால் இதுவரையில் சிறிலங்காப் பொலிசாருக்கு இவை இரண்டும் இல்லாது இருந்தமையும் கவலைக்குரியதாகும்.

சிறிலங்காப் பொலிசாரைப் பொறுத்து அதன் இன்றைய சாதனைகளாக அராஜகமும், லஞ்ச ஊழலுமே உள்ளன. சிறிலங்காவில் அதிகளவு லஞ்ச ஊழலும், முறை கேடுகளும் நிலவும் துறைகளில் பொலிஸ்துறை முதன்மையானது என அண்மைய மதிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது. இதற்கு அடுத்ததாக நீதித்துறை உள்ளதெனவும் அம்மதிப்பீடு மேலும் தெரிவிக்கின்றது.

சிறிலங்கா அரசியலில் இனவாதம் தலைதூக்கத் தொடங்கியதோடு பொலிசாரின் அராஜகமும் எல்லை மீறத் தொடங்கியதெனலாம். அதிலும் குறிப்பாகப் பயங்கரவாதத் தடைச் சட்டம், நீடித்த காலம் நிலவிய அவசர காலச் சட்டம் என்பன பொலிசாருக்கு எல்லை மீறிய அதிகாரங்களைக் கொடுத்தன. இதன் விளைவானது சிறிலங்காப் பொலிசார் தமக்கென ஒழுக்க விதிகள் உள்ளன என்பதையே மறந்தனர். தாம் எவற்றிற்கும் பதிலளிக்க வேண்டிய கடப்பாடு உள்ளவர்கள் அல்ல என்ற உணர்வையும் அவர்கள் பெற்றிருந்தனர்.

இதன் விளைவானது ஒருபுறம் பொலிசாரின் அராஜகத்தை எல்லை மீறி அதிகரித்தது. மறுபுறத்தில் ஊழல், மோசடிகள் என்பன கட்டுப்பாடின்றி வளர்வதற்கு காரணமாகியது. வேறொருவகையில் பார்த்தால் ஒன்றுடன் ஒன்று இணைந்தவையாகவும், ஒரே குறிக்கோளுடையவையாகவும் இருந்தன.

பாதுகாப்பு ஏற்பாடுகள் என்று வழங்கப்பட்ட அபரிதமான அதிகாரங்களினால், கைதுகள், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள் என்பன சிறிலங்காப் பொலிசாருக்குச் சட்டத்திற்கு உட்பட்டவை போன்றதாகியது. அதிலும் தமிழருக்கு எதிரானதெனின் தமது பதவி உயர்விற்கான வழிவகை போன்றும் அவர்களால் நோக்கப்பட்டது.

இதேவேளை, இக்கைதுகளும், சித்திரவதைகளும் கூட இவர்களுக்கு பணம் கிடைக்கும் மார்க்கங்கள் ஆகின. அதாவது கைது செய்யப்பட்டவர்கள் வெளிவருவதற்கெனவும் பெருமளவு லஞ்சம் கொடுக்கப்பட்டது. பெண்கள் மீதான சித்திரவதைகள், பாலியல்வல்லுறவுகள் குறித்து வெளியாகியுள்ள தகவல்கள், அதில் இருந்து பெரும் தொகைப் பணத்தை 'வழங்கியேனும் வெளியில் வந்துவிடவேண்டும் என்ற அச்சுறுத்தலை மக்களுக்குக் கொடுத்தது. இது லஞ்சம், ஊழலுக்கும் பெரும் சந்தர்ப்பத்தைக் கொடுத்தது.

இதனைத் தவிர சிறிலங்காவில் வளர்ந்துவரும் போதைப் பொருள் கடத்தல், விபச்சாரம், பாதாள உலகக் கோஷ்டிகளின் செயற்பாடுகள் என்பன பொலிசாரின் ஆசீர்வாதத்துடனேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு அவர்கள் வழங்கும் ஆதரவிற்கமைய பெருமளவான நிதி வழங்கப்படுவதோடு, வேறு கவனிப்புக்களும் இடம்பெறுகின்றன.

இதேவேளை, சிறிலங்கா நீதிமன்றங்களிலும் ஊழல், மோசடிகள் பெருமளவில் இடம்பெறுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆகையினால், பொலிஸ்துறையில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை நீதித்துறையாலும் தட்டிக் கேட்க முடியாததொரு நிலையே காணப்படுகின்றது.

இத்தகையதொரு சூழ்நிலை உருவாக்கத்திற்கு பொலிஸ் உட்பட அனைத்து ஆயுதப்படைத்தரப்பிலும், நீதித்துறையிலும் இனவாதம் மேலோங்கி இருப்பதே காரணமாகும். இனவாத நோக்கில் உருவாக்கப்படும் சட்டங்கள் -இனவாத நோக்கில் அவற்றை அமுல் படுத்துதல் என்பன பொலீஸ் உட்பட ஆயுதப்படையினரின் அதிகாரங்களைத் தாங்கள் கையில் எடுத்துக்கொள்வதற்கும், கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பனவின்றச் செயற்படவும் காரணமாகின்றது.

இத்தகையதொரு நிலையில் பொலிசாருக்கென ஒரு ஒழுக்கக்கோவையையும், சத்தியப்பிரமாண உறுதி மொழிகளையும் நடைமுறைக்குக் கொண்டு வருவதினால் பயன் ஏதும் கிட்டுமா என்பது கேள்விக்குரியதொன்றே ஆகும். ஆயினும், இத்தகைய ஒழுக்கக் கோவைகளும், உறுதிமொழிகளும் சில இடையூறுகளை தவிர்க்க முடியாது ஏற்படுத்திவிடும். இந்த வகையில் சிறிலங்கா பொலிசாரின் அராஜகங்களுக்கு எச்சரிக்கை போன்றாயினும் இவ்விதிகள் அமுலாக்கப்படுவது விரும்பத்தக்கதே.

# அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சில் 4 முக்கிய விடயங்கள் ஆராயப்படும்!

## - அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 18 ஆம் திகதிமுதல் 21ஆம் திகதிவரை ஜப்பானின் ஹக்கோனி நகரில் நடைபெறும் அரசு - புலிகள் ஆறாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் 04 விடயங்கள் குறித்து முக்கியமாக ஆராயப்படவுள்ளதாக பேச்சுக்களில் அரசு தரப்புப் பிரதிநிதிகள் குழுவின் தலைவராகப் பங்காற்றும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில் நேற்று முன்தினம் தகவல் வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

□ புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள், அவற்றைத் தீர்க்கும் வழிகள், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தீர்மானங்களை அமுல்படுத்தும் நடைமுறை.

□ புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்படவுள்ள சிறுவர்களின் பராமரிப்பு, கல்வி, எதிர்காலம்.

□ சமஷ்டி முறை அதிகாரப் பகிர்வில் நிதி நடவடிக்கைகள்.

□ ஜூன் மாதம் ஜப்பானில் இடம்பெறவுள்ள, இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டுக்கான முன்னேற்பாடுகள் ஆகிய நான்கு முக்கிய விடயங்களே ஆராயப்படவுள்ளன.

ஜப்பான் சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக அடுத்த வாரத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதால் அடுத்தவாரம் அதற்கான வெளிநாட்டு இராஜ தந்திரிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர். இவர்கள் கொழும்பிலும், கிளிநொச்சியிலும் அரசு - புலிகளுடன் பேச்சு நடத்துவார்கள்.

அடுத்தவாரம் இங்கு வரும் வெளிநாட்டு இராஜதந்திரிகளில், நோர்வேயின் வெளிநாட்டமைச்சர் ஜான் பீற்றர்ஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன், கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரைய்ஹம், சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் முன்னாள் தலைவர் இயன் மார்டீன் ஆகியோர் அடங்குகின்றனர் என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# வாக்குறுதிகளை நம்பத் தயாரில்லை; தீர்வுவரும்வரை போராட்டம் தொடரும்!

## - ஆபத்தான நிலையிலுள்ள தமிழ்க் கைதிகள் அறிவிப்பு

(கொழும்பு)

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது பிரச்சினைகள் தொடர்பாக உறுதியான தீர்வு எட்டப்படும் வரை உண்ணாவிரதத்தைத் தொடரப் போவதாக அறிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் பேனாட் குணதிலக நேற்றுக் காலை சிறைச்சாலைக்கு விஜயம் செய்து கைதிகளுடன் கலந்துரையாடியுள்ளார். இதன்போது கைதிகளின் பிரச்சினைகள் தொடர்பாக 10 நாட்களுக்குள் சாதகமான முடிவை அறிவிப்பதாக அவர் தெரிவித்தபோதும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் நடைமுறைப் படுத்தப்படும் வரை போராட்டம் தொடரும். உறுதி மொழிகளை நம்பி தமது போராட்டத்தை கைவிடத்தயார் இல்லை என கைதிகள் தெரிவித்துள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் கைதிகளில் 24 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. 13 பேர் இரத்த வாந்தி எடுத்துள்ளனர்.

"பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி பிணையில் விடுதலை செய், அல்லது எம்மீது தொடரப்படும் வழக்குகளை வடக்கு - கிழக்கில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றி அங்கு விசாரணைசெய்" என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரையான உண்ணா விரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

உண்ணாவிரதம் மேற்கொள்ளும் கைதிகளில் ரகுபதி சர்மா என்பவர் மயக்க நிலையை அடைந்துள்ளார். சிவனேஸ்வரன் எனும் கைதி இதயத்தாக்கத்திற்கு உட்பட்டு நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் கைதிகளில் 64 பேருக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவர்களை விட வெலிக்கடைச்சிறைகளில் 07 பெண் கைதிகள் உள்ளனர்.

கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தைப் பார்வையிடச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத் துரை விநாயகமூர்த்தியே கைதிகளின் மோசமான நிலைமைகளை நிருபர்களுக்கு நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

வழக்குகளை அவர்களின் சொந்த இடங்களுக்கு மாற்றி அங்குள்ள நீதிமன்றங்களில் விசாரணை செய்வது பற்றி சட்டமா அதிபருடன் நேற்று முன்தினம் பேச்சுக்கள் நடத்தியதாகவும், அவர் இந்த விடயம் தொடர்பாக பரிசீலிப்பதாகவும் கூறியதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து மேலும் 165 பேர் கிளிநொச்சி வந்தனர்.

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா பூந்தோட்டம், நெளுக்குளம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் மீள் குடியேற்றத்திற்காக கிளிநொச்சிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

நேற்று வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரின் அனுமதியுடன் புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியேற்ற அமைச்சினால் 165 பேர் கொண்ட 36 குடும்பங்கள் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் செயலகத்தில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவர்களை அந்தந்தப் பகுதி கிராமசேவகர் பொறுப்பேற்று அவர்களின் உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைக்காக "நிக்கொட்" நிறுவனத்தினால் 25000 ரூபா மீள் குடியேற்றக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு மீள்குடியேற்றத்திற்காக வந்த மக்களுக்கு U.N.H.C.R. நிறுவனம் உணவு அல்லாத பொருட்களை வழங்கியுள்ளது.

இவர்கள் கிருஸ்ணபுரம், ஆனந்தபுரம், மருதநகர், செல்வாநகர், பாரதிபுரம், திருநகர், மலையாளபுரம், ஜெயந்திநகர், அம்பாள்நகர், திருவையாறு போன்ற இடங்களில் இருந்து இராணுவ நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்து மேற்படி நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)



வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கு மீளக்குடியமர வருகை தந்துள்ளோரில் ஒரு பகுதியினர்.



புலிகளுடனான சந்திப்பில் கலந்து கொண்ட ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள்

### கிளிநொச்சி மரு...

கல் நாட்டப்பட்டது. அத்துடன் அவருடன் கூடவந்த ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகளும், அரசியல்துறைப் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கிளிநொச்சி அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் உட்படப் பலரும் அடிக்கற்களை நாட்டி வைத்தனர். தொடர்ந்து இவ் அடிக்கல் நாட்டும் வைபவத்திற்கான ஞாபகார்த்தக் கல்லினை ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் ரடோ ஓசினோ திரைநீக்கம் செய்து வைத்தார்.

இவ் அடிக்கல் நாட்டும் விழாவில் உதவி அரசாங்க அதிபர்கள், *அரசியல்துறையைச் சேர்ந்த தயா மாஸ்ரர், தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இவ் வைத்தியசாலையினை நவீன வசதிகள் கொண்டதாக அமைப்பதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 70 மில்லியன் ரூபாவை முதற்கட்டமாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(பா)

### தொண்டர்...

வருகின்றனர்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை தாம் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக வட மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். இதேவேளை, வவுனியா வடக்கு வலய தொண்டர் ஆசிரியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(பா)


## குழந்தையைப் பொறுப்பேற்கத் தொடர்பு கொள்க

தாயார் இறந்த நிலையில் குழந்தை ஒன்று வவுனியா வைத்தியசாலையில் உள்ளது. இக்குழந்தையை வை. பாக்கியராஜா, நாச்சிமார் கோவிலடி, முழங்காவில் என்பவரிடம் பாரமளிப்பதற்கு வவுனியா மாவட்ட நீதவானும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும் காத்திருக்கின்றனர்.

சம்பந்தப்பட்டவர் மேற்படி முகவரியில் இல்லாததால் உரித்துடையோர் யாராவது உடனடியாக செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணக் கிளைகளில் ஏதேனும் ஒன்றில் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.



**இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில்**

## வருடாந்த பொதுக்கூட்டம்

09-03-2003 ஞாயிறு(நாளை) காலை 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். அம்பாள் அடியார்களை கலந்து ஆலய வளர்ச்சிக்கு உதவுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

**ந.செல்வராசா,**
செயலாளர்,
அறங்காவலர் சபை.

(3006)



## கேள்வி அறிவித்தல்

**கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்வரும் மாதங்களில் உலர் உணவு விநியோகம் மேற்கொள்ளத் தேவையான நாட்டுப் புழுங்கல் அரிசி உள்ளூர் வழங்குபவர்களிடமிருந்து மாத்திரம் பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.**

| | | |
|---|---|---|
| 2003 ஏப்ரல் | - | 520 மெ.தொன் |
| 2003 மே | - | 520 மெ.தொன் |
| 2003 யூன் | - | 520 மெ.தொன் |

**இதற்கான கேள்விப் படிவத்தினையும், மேலதிக விபரங்களையும் கிளிநொச்சி மாவட்டப் புனர்வாழ்வுக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் குறிப்பிடுகின்றேன்.**

**கேள்வி விண்ணப்பம் வழங்கும் காலம் - 2003.03.14 காலை 10.00 மணிவரை.**

தி.இராசநாயகம்,
கேள்விச்சபைத் தலைவரும்,
அரசாங்க அதிபரும்,
கிளிநொச்சி மாவட்டம்.

**(சி-8006)**


### முஸ்லிம் பாராளு...

இடம் பெற்றிருந்தனர்

சிறிலங்கா அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே அடுத்து நடைபெறவிருக்கும் பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம்களின் சார்பில் தனியான பிரதிநிதிகள் பங்குபற்ற வேண்டும் என்று இப்பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக சகல தரப்பினருடனும் பேசி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சிறிலங்காப் பிரதமர் முஸ்லிம் பாராளுமன்றக் குழுவுக்கு உறுதியளித்துள்ளார்.

இதேகோரிக்கையை முன்வைத்து சிறிலங்காவுக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கையும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ். - இந்திய அணிகள் நேற்றைய ஆட்டத்தில் வெற்றி

உலகக் கிண்ணப் போட்டியில் சுப்பர் சிக்ஸ் முதலாவது ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சிறிலங்காவை 96 ஓட்டங்களால் தோற்கடித்தது. அவுஸ். அணித் தலைவர் 114 ஓட்டங்களைப் பெற்றார்.

அவுஸ். - 319/5
சிறிலங்கா - 229/9

இரண்டாவது சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் இந்திய அணி கென்யாவை ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி ஈட்டியது. இந்திய அணித் தலைவர் கங்குலி 107 ஓட்டங்களைப் பெற்றார்.

கென்யா - 225 / 6
இந்தியா - (47.5 ஓவர்) 226/4

### மாநாட்டுக்கான...

றது. இதன் வெளிப்பாடாகவே உயர் மட்ட தலைவர்கள் இந்த முன் னேற்பாட்டுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் அமெரிக்காவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சட் அர்மிரேஷ்சும் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பதவியேற்பு...

மேதகு வே. பிரபாகரன் அவர்களையும், சிறிலங்கா அரசின் முக்கிய தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தி இருந்தார் என்பது தெரிந்ததே.

### விடுதலைப்...

ளில் நடைபெற்ற விடயங்கள் சம்பந்தமாக கூட்டமைப்பினருக்குத் தெளிவுபடுத்தினர். இன்றைய அரசியல் சூழல் குறித்தும் பேச்சுவார்த்தை சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் சம்பந்தமாகவும், முஸ்லிம் மக்கள் தொடர்பான விடயங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க விடுதலைப் புலிகளும், தமிழ்க் கூட்டமைப்பும் ஒற்றுமையாக பாடுபட உறுதி கொண்டுள்ளோம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இச்சந்திப்புப் பற்றி இவர் வவுனியாவில் வைத்து எமது வவுனியா செய்தியாளருக்கு அளித்த விசேட பேட்டியில் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தீர்வு முயற்சிகள் எட்டப்பட வேண்டும். அது தொடர்பான கருத்துக்களை விடுதலைப் புலிகளிடம் நாம் பரஸ்பரம் பகிர்ந்து கொண்டோம். அத்துடன் முன்வைக்கப்படவுள்ள தீர்வு முயற்சிகளில் வடக்கு - கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களுக்கு உரிய வகையில் முடிவுகள் எட்டப்படவேண்டும் எனவும் நடைபெற்று முடிந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அபிப்பிராயங்கள், கருத்துக்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் இனி நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுக்களில் தமிழ்க் கூட்டமைப்பின் ஆலோசனைகளும் பெறப்படும் என விடுதலைப் புலிகள் எமக்கு கூறியுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

நேற்று காலை 11.00 மணிமுதல் பி.ப 1.30 மணிவரை இடம்பெற்ற மேற்படி சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களும், தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களும், திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களும் கலந்து கொண்டனர். தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா. சம்பந்தன், ஜோசெப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராசா, ரவிராஜ், தங்கவடிவேல், சிவாஜிலிங்கம், ஞா. கிருஸ்ணபிள்ளை, சந்திரநேரு, துரைரட்ணசிங்கம், கஜேந்திரகுமார், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, செல்வம் அடைக்கலநாதன், இரா. குகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோருடன் சுரேஸ் பிரேமச் சந்திரனும் கலந்து கொண்டார்.

கூட்டமைப்பின் தலைவர் ஆனந்தசங்கரி இந்தியா சென்றமையின் காரணமாக சமுகமளிக்கவில்லையென சக பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். (10. சோ)

### ஆசிய அபிவிருத்தி...

வந்து கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இவர்களை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சிரான் செயலகப் பணிப்பாளர் இ.செல்வின், கிளிநொச்சி அரச அதிபர் ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர் கிளிநொச்சியில் உள்ள சமாதான செயலகத்தில் வைத்து ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினரை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

கிளிநொச்சி நகர அபிவிருத்தி தொடர்பாக இச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினர் கிளிநொச்சி மத்திய கல்லூரி மற்றும் விடுதலைப் புலிகளால் தகர்த்தழிக்கப்பட்ட ஆனையிறவுமுகாம் பகுதியினையும் சென்று பார்வையிட்டனர்.

கிளிநொச்சி அரச அதிபர் பணிமனையில் வைத்து இக்குழுவினர் செய்தியாளர் மாநாடு ஒன்றை யும் நடத்தினர்.

போரால் அழிந்துள்ள பகுதிகளை நாம் நேரில் சென்று பார்வையிட்டபோது எமக்கு மிகுந்த வேதனையாகவுள்ளது என ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ரடோ ஓசினோ செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பிற்பகல் 2.30 மணியளவில் உலங்கு வானூர்தி மூலம் இக் குழுவினர் கொழும்பு திரும்பினர்.

(பா)


## தனியார் கல்வி நிலையப் பொதுக் கலந்துரையாடல்

*வன்னிப் பெருநிலப்பரப்பில் இயங்கிவரும் தனியார் கல்வி நிலையங்கள், தொழில்சார் பயிற்சி நிலையங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள், நிர்வாகிகள் 15. 03. 2003 அன்று கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பி. ப. 2. 00 மணிக்கு நடைபெறும். பொதுக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின் றோம்.*

*குறிப்பு: -15. 03. 2003 சனிக்கிழமை தனியார் கல்வி நிலையங்கள் தொழில்சார் பயிற்சி நிலையங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் யாவற்றையும் நிறுத்தி ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.*

தனியார் கல்வி நிர்வாகப் பிரிவு,
அரசியல் துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

**(சி.8003)**



## துணுக்காய் பிரதேச சபை

## அறிவித்தல்

எமது சபையின் நிலவாடகை, அறை வாடகை கட்டத் தவறி நிலுவையுள்ளோர் 2003.03.30ந் திகதிக்கு முன்னர் நிலுவைகளைச் செலுத்தித் தங்கள் பதிவுகளைப் புதுப்பிக்கவும். தவறின் இக் கடைகள் பகிரங்கக் கேள்வி அறிவித்தலில் புதியவர்களுக்கு வழங்கப்படும்.

ஒப்பம்:-
*கு. விக்ரர் ஜெயசிங்கம்,*
*விசேட ஆணையாளர்,*
*பிரதேச சபை,*
*துணுக்காய்.*

(2914)



இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.